## நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை
## மேட்டூர் நகராட்சி

**மேட்டூர் நகராட்சியின் சாதாரணக் கூட்டம் நகர்மன்றத்தில் நகராட்சியின் தனி அலுவலர் அவர்களால் 14.12.2018 ம் தேதி பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெற உள்ளது.**

### மன்றப் பொருள்

**1)** மேட்டூர் நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளில் பாதாள சாக்கடை திட்டம் நிறைவேற்ற அரசாணை எண்.G.O. (D) No.25/MA & WS (MA3) நாள்.**27.01.2014**ல் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு தற்போது அனைத்து பணிகளும் முடிவடையும் தருவாயில் **14.5.2018**ல் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களால் நடத்தப்பட்ட ஆய்வு கூட்டத்தில் பாதாள சாக்கடை திட்டத்தில் விடுபட்ட பகுதியில் பாதாள சாக்கடை திட்டம் அமைக்க நிதி ஒதுக்கீடு பெற திட்ட பிரேரணை சமர்ப்பிக்க அறிவுறுத்தப்பட்டதின் அடிப்படையில் விடுப்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்ட அமைக்க Rough Cost Estimate ரூ.**978.00** இலட்சத்திற்கு பிரேரணை தயார் செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டு ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டம் **2018–2019**ல் ரூ.**978.00** இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்து அரசாணை எண்.Go.(Ms)82 நாள்.**23.08.2018**ல் பெறப்பட்டது.

மேற்கண்ட பணிக்கு தொழில்நுட்ப அனுமதி பெற விரிவான திட்ட பிரேரனை தயார் செய்யவும், விடுப்பட்ட பகுதியில் சேகரிப்பு குழாய்கள் Lifting Station மற்றும் Pumping maintanance மற்றும் Pumping Station அமைக்க Level எடுத்து பிரேரணை தயார் செய்யவும், இந்நகராட்சி பொறியியல் பிரிவில் தொழில் நுட்ப பணியாளர்கள் போதுமான அளவில் இல்லாததால் தனியார் நிறுவனமான Consultant Engineers கொண்டு **30** வார்டுகளில் விடுபட்ட பகுதியில் Level எடுத்து திட்ட பிரேரணைகள் விரிவான திட்ட அறிக்கையுடன் உரிய முறையில் தயார் செய்து வழங்க ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ.**5,00,000/–** ஆகும் . மேற்கண்ட செலவினத்தை மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.2557/2018/இ1)**

**தீர்மான எண். 264 நாள் 14.12.2018**

**அனுமதிக்கப்பட்டது.**

2) மேட்டூர் நகராட்சியில் பொது பிரிவில் திரு.லோ.உமாசங்கர் என்பவர் 22.03.2018 முதல் இளநிலை உதவியாளர் பணியில் சேர்ந்து இந்நாள் வரை நல்ல முறையில் பணியாற்றி வருகிறார். மேலும், அன்னாருக்கு வேலூர் மாவட்டம், ஆம்பூர் சொந்த ஊர் ஆகும். அன்னார் தனது வயது முதிர்ந்த தாயார் மற்றும் குடும்பத்தினை அருகில் இருந்து கவனிக்க வேண்டிய சூழ்நிலை உள்ளதால், அன்னார் அதே மாவட்டத்தை சேர்ந்த ஆம்பூர் நகராட்சியில் இளநிலை உதவியாளர் பணியிடம் காலியாக உள்ளதால் அந்நகராட்சிக்கு மாற்றம் செய்து தர கேட்டு விண்ணப்பித்துள்ளார். எனவே அன்னார் மேட்டூர் நகராட்சியிலிருந்து ஆம்பூர் நகராட்சிக்கு பணியிட மாற்றம் கோரும் விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி விண்ணப்பத்தினை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர், சேலம் அவர்களின் வழியாக அனுப்பலாம்.

**(ந.க.எண்.5345/2018/சி1)**

**தீர்மான எண். 265 நாள் 14.12.2018**

**அனுமதிக்கப்பட்டது.**

3) நகராட்சிக்குட்பட்ட 30 வார்டுகளிலும் விடுபட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டம் அமைக்க Consultant முறையில் Level எடுத்து விரிவான திட்ட பிரேரணை, அனைத்து வரைபடங்கள் மற்றும் Design உடன் தயார் செய்தல் பணிக்கு ரூ.6.00 லட்சம் மதிப்பீட்டில்

ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 23.11.2018 ம் தேதியன்று வரப் பெற்ற கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | திட்ட பிரேரணை தொகையில் |
|---|---|---|---|
| 1 | திரு.மாதையன்,<br>மேட்டூர் | – | 0.60% |
| 2 | திரு.மா.சுப்ரமணியன்,<br>மேட்டூர் | – | 0.45% |

அலுவலக குறிப்பு

அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று மன்ற அனுமதியை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கு மன்றம் ஏற்கலாம்.

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திட்ட பிரேரணை தொகையில் 0.45 சதவீதம் என ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள திரு.மா.சுப்ரமணியன் ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்றுக் கொள்ளலாம்.

அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று மன்ற அனுமதி எதிர்நோக்கி பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் ஏற்கலாம்.

**(ந.க.எண்.2557/2018/இ1)**

**தீர்மான எண். 266 நாள் 14.12.2018**

**அனுமதிக்கப்பட்டது.**

**4)** மேட்டூர் நகராட்சி 30 வார்டுகளில் சிறுபாலத்தில் மழைக்காலத்தில் அடைப்புகளை சரி செய்ய Non Presure Bcc Pipe சப்ளை செய்தல் பணிக்கு ரூ. 58,000/– மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 03.12.2018ம் தேதியன்று வரப்பெற்ற கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/குறைவு |
|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு.ஆர்.மாதையன்,<br>செட்டிபட்டி, கோவிந்தப்பாடி<br>மேட்டூர் | – | 0.20% சதவிகிதம் மதிப்பீட்டு விகிதத்தை விட குறைவு |
| 2 | திரு.மா.சுப்பரமணியன்,<br>கோவிந்தப்பாடி<br>மேட்டூர் | – | 2.40% சதவிகிதம் மதிப்பீட்டு விகிதத்தை விட அதிகம் |

*__அலுவலக குறிப்பு:__*

1. வரப் பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.20% சதவீதம் குறைவாக ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள திரு.ஆர்.மாதையன், கோவிந்தபாடி ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்றுக் கொள்ளலாம்.

**(ந.க.எண்.5628/2018/இ1)**

**தீர்மான எண். 267 நாள் 14.12.2018**

**அனுமதிக்கப்பட்டது.**

**5)** இந்நகராட்சியில் பழைய அலுவலக கட்டிடத்தின் மராமத்து பணி மற்றும் மின் வசதி செய்தல் பணிக்கு ரூ.4.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 06.12.2018ம் தேதியன்று வரப்பெற்ற கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/குறைவு |
|---|---|---|---|
| 1 | திரு.எம்.ராமசாமி,<br>8/140 பெரியவனவாசி<br>மேட்டூர் | – | 0.20% சதவிகிதம் மதிப்பீட்டு விகிதத்தை விட குறைவு |
| 2 | திரு.கோவிந்தன்<br>பூசாரிப்பட்டி(அ)<br>ஓமலூர் | – | 1.25% சதவிகிதம் மதிப்பீட்டு விகிதத்தை விட அதிகம் |

*__அலுவலக குறிப்பு:__*

1. வரப் பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.20% சதவீதம் குறைவாக ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள திரு.எம்.ராமசாமி, 8/140, பெரிய வனவாசி ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்றுக் கொள்ளலாம்.

**(ந.க.எண்.3922/2018/இ1)**

தீர்மான எண். 268 நாள் 14.12.2018

அனுமதிக்கப்பட்டது.

**6)** மேட்டூர் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் 28 பொதுக்கழிப்பிடங்கள் உள்ளதாகவும், குறைவான துப்புரவு பணியாளர்களைக் கொண்டு அனைத்து கழிப்பிடங்களையும் பாரமரிக்க இயலாததால், தனியார் N60 நிறுவனமாகிய M/S சுபம் கங்கா சேவா சான்ஸ்தான், பெங்களுர் என்ற நிறுவனத்தின் மூலம் 6 கழிப்பிடங்களை பராமரித்து வரவும், அதற்கான சேவைக்கட்டணமாக கழிப்பிடம் ஒன்றிற்கு ரூ.6000/ வீதம் மாதம் ஒன்றிற்கு ரூ.36,000/– செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது. M/S.சுபம் கங்கா சேவா சான்ஸ்தான, பெங்களுர் நிறுவனம் குறைந்த பட்சம் 10 எண்ணிக்கை கழிப்பிடங்களை பராமரிக்க அனுமதி கோரியுள்ளனர். அதன்படி, துப்புரவு ஆய்வர் மேலும் 4 கழிப்பிடங்களை மேற்கண்ட நிறுவனத்திற்கு ஒதுக்கீடு செய்து தரக்கோரியுள்ளார். எனவே , தற்போது பராமரித்து வரும் 6 கழிப்பிடங்களுடன் மேலும் கூடுதலாக 4 கழிப்பிடங்களை பராமரிக்க தனியார் நிறுவனமாகிய M/S. சுபம் கங்கா சேவா சான்ஸ்தான், பெங்களுர் அவர்களுக்கு அனுமதி வழங்கவும், அதற்கான சேவைக் கட்டணமாக கழிப்பிடம் ஒன்றிற்கு ரூ.6000/– வீதம் மாதம் ஒன்றிற்கு ரூ.60,000/– செலவினம் மேற்கொள்ளவும் , ஓராண்டிற்காக தோராய செலவினம் ரூ.7.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார நலன் கருதியும், துப்புரவு பணியாளர்கள் பற்றாக்குறையை கருதியும் செலவினத் தொகையினை வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.3216/2018/எச்1)

**தீர்மான எண். 269 நாள் 14.12.2018**

**அனுமதிக்கப்பட்டது.**

ஆணையாளர் (ம) தனி அலுவலர்,
மேட்டூர் நகராட்சி

<u>நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை</u>

<u>மேட்டூர் நகராட்சி</u>

**மேட்டூர் நகராட்சியின் சாதாரணக் கூட்டம் நகர்மன்றத்தில் நகராட்சியின் தனி அலுவலர் அவர்களால் 31.12.2018 ம் தேதி பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெற உள்ளது.**

<u>மன்றப் பொருள்</u>

**1 )** மேட்டூர் நகராட்சியில் சேகரமாகும் குப்பைகளை அந்தந்த பகுதிகளிலேயே உரமாக்க செறிவூட்டப்பட்ட நுண் உரக்கூடம் அமைக்க (Micro Compose Centre) அமைக்க 14.05.2018ல் நகராட்சி நிர்வாக ஆணையரகம் சென்னை அவர்களால் நடத்தப்பட்ட ஆய்வுக்கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது. அதன்படி இந்நகராட்சிக்குட்பட்ட 3 இடங்களில் செறிவூட்டப்பட்ட நுண் உரக்கூடம் அமைக்க தேர்வு செய்யப்பட்டு ரூ.202/– இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் சேலம் அவர்களின் வழியாக நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு திட்டபிரேரனை சமர்ப்பிக்கப்படுகிறது. மேற்கண்ட செறிவூட்டப்பட்ட நுண்உரக்கூடம் அமைக்க நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்கள் செயல்முறை கடித ந.க.எண். 22866/2018/P3 நாள்.23.08.2018ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டது. மேலும் மேற்கண்ட பணிக்கான தொழில்நுட்ப அனுமதி பெற திட்ட பிரேரனை தயார் செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் சேலம் அவர்கள் வழியாக நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு, சமர்ப்பிக்கப்பட்டு தலைமைப் பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையரசம் சென்னை அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்.18281/2017/Do1 நாள்.05.09.18ல் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டது. ஆகவே மேற்கண்ட பணிக்கு நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி பெற உயர்திட்ட பிரேரனை தயார் செய்யப்பட்டமைக்கு செலவினத்தொகையினை ரூ.40,260/– தன்னால் வழங்கப்பட்டது என உதவிப்பொறியாளர் திருமதி.எஸ்.பிரேமா தெரிவித்துள்ளார். எனவே மேற்காணும் செலவுத்தொகையினை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. இதற்காகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்க்கொள்ளலாம்.

**(ந.க.எண்.2289–7/2018/இ1)**

**தீர்மான எண். 270 நாள். 31.12.2018**

**அனுமதிக்கப்பட்டது**

**2)** இந்நகராட்சி பகுதியில் உள்ள shri Ramalinga Sowdeswari Devanga Society welfare Trust represented by Authorized Person V. மோகன் கிருஷ்ணன் என்பவர் சொத்துவரி சம்மந்தமாக மேட்டூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் O.S.26/18 மூலம் வழக்கு தொடர்ந்து அதில் ஆணையர் மேட்டூர் நகராட்சி அவர்களை பிரதிவாதியாக சேர்க்கப்பட்டு வழக்கு தொடர்ந்துள்ளார்.

மேற்படி வழக்கினை நகராட்டசி வழக்கறிஞர் திரு.TMA இனியன் அவர்களிடம் ஒப்படைத்து நகராட்சி சார்பாக ஏற்று நடத்திடவும் இதற்கு செலவாகும் வழக்கறிஞர் கட்டணம் அனைத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.5544/2018/எப்1)**

**தீர்மான எண். 271 நாள். 31.12.2018**

**அனுமதிக்கப்பட்டது**

**3)** இந்நகராட்சி பகுதியில் உள்ள சக்தி நகரில் குடியிருக்கும் திருமதி.ராஜம்மாள் க/பெ தனபால் என்பவர் குடிநீர் சம்மந்தமாக மேட்டூர் மாவட்ட முன்சீப் கோர்ட்டில் IA No.116/2016 in O.S.23/2016- ல் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் ஆணையர் மேட்டூர் நகராட்சி அவர்களை பிரதிவாதியாக சேர்ந்து வழக்கு தொடர்ந்துள்ளார். இவ்வழக்கினை நகராட்சி வழக்கறிஞர் திரு.TMA. இனியன், B.A.LLB., அவர்களிடம் ஒப்படைத்து நகராட்சி சார்பாக ஏற்று நடத்திடவும் இதற்கு செலவாகும் வழக்கறிஞர் கட்டணம் அனைத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.684/2016/எப்1)**

**தீர்மான எண். 272 நாள். 31.12.2018**

**அனுமதிக்கப்பட்டது**

**4)** மேட்டூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சேகாரமாகும் **49823** cm குப்பைகளை Bio mining முறையில் அகற்ற **14.05.2015** ல் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் ஆய்வு

கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டதின் அடிப்படையில் Bio mining முறையில் குப்பைகளை அப்புறப்படுத்தி திட்ட பிரேரனை ரூ.328.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு திட்ட பிரேரனை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்கள் வழியாக நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டு தூய்மை இந்தியா திட்டம் 2018–19ன் கீழ் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்.22866/P3/2018 நாள்.23.08.2018ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டது. மேலும் மேற்கண்ட பணிக்கான தொழில் நுட்ப அனுமதி பெற திட்ட பிரேரனை தயார் செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் சேலம் அவர்களின் வழியாக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டு தலைமை பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்.18281/2016/எப்1 நாள் 25.08.2018ல் தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டது. ஆகவே மேற்கண்ட பணிக்கான திட்ட பிரேரனை தயார் செய்யப்பட்டமைக்கு செலவினத்தொகையினை ரூ.12960/– உதவிப்பொறியாளர் திருமதி.எஸ்.பிரேமா தன்னால் வழங்கப்பட்டது என தெரிவித்துள்ளார். எனவே மேற்காணும் செலவுத்தொகையினை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. இதற்காகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்க்கொள்ளலாம்.

**(ந.க.எண்.2289–8/2018/இ1)**

**தீர்மான எண். 273 நாள். 31.12.2018**

**அனுமதிக்கப்பட்டது**

**5)** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட தங்கமாபுரிபட்டிணம் , மேட்டூர் அணை R.S.2 வசிக்கும் திரு.R. செந்தில்குமார் த/பெ ராமசாமி என்பவர் இவ்வலுவலக அறிவிப்பினை ( ந.க.எண்.1055/எப்1/2018 நாள்.25.04.2018ம் தேதிய) பெற்று கொண்டு தாவா சொத்தை இடிக்கவோ சேதப்படுத்தவோ கூடாது என விதிமுறைகால மாவட்ட நீதிபதி நீதிமன்றம் சேலத்தில் IA 94/18 in OS.44/18 மூலம் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கு மேட்டூர்

மாவட்ட உரிமையியல் நீதிபதி நீதிமன்றம் மேட்டூரில் வழக்கு நடைபெறுகிறது. வழக்கு எண்.62/18 ஆகும். மனுதாரர் ஆணையாளர் மேட்டூர் நகராட்சி அவர்களை எதிர்மனுதாரர்/ பிரதிவாதியாக சேர்க்கப்பட்டு வழக்கு தொடரப்பட்டுள்ளது. மேற்படி வழக்கினை நகராட்சி சார்பில் ஏற்று நடத்துமாறு நகராட்சி வழக்கறிஞர் திரு.TMA இனியன் அவர்களை கோரப்பட்டது. வழக்கிற்காகும் வழக்கு செலவினம் முழுவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. முன் அனுமதி பெற்று வழக்கறிஞருக்கு தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.1055/2018/எப்1)**

**தீர்மான எண். 274 நாள். 31.12.2018**

அனுமதிக்கப்பட்டது

**6)** மேட்டூர் நகராட்சியில் புதிய சுத்திகரிப்பு நிலையத்தில் இயங்கி கொண்டு இருக்கும் 50 HP No I யூனிட்டர் மோட்டார் மற்றும் பம்பு பேரிங்கிள் தேய்மானம் அடைந்து விட்டதால் மோட்டார் பம்பு இணைக்கும் புற்றி கப்லர் பழதடைந்ததை மாற்றுவதற்கும் மோட்டார் பம்புகளை சர்வீஸ் செய்வதற்கும் உத்தேச செலவினம் ரூ.99,000/- ஆகும். மேற்கான் செலவினத்தை மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. இதற்காகும் செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்க்கொள்ளலாம்.

**(ந.க.எண்.5829/2018/இ1)**

**தீர்மான எண். 275 நாள். 31.12.2018**

அனுமதிக்கப்பட்டது

**7)** மேட்டூர் நகராட்சியில் தலைமை சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள குளோரின் சிலிண்டரிலிருந்து செல்லும் காப்பர் டியூப்பிள் பழுதடைந்து விட்டதால் புதியதாக குளோரின் பிளிச்சிங் சேம்பர் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.95000/- ஆகும். மேற்கண்ட செலவினத்தை மேற்க் கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. இதற்காகும் செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்க்கொள்ளலாம்.

**(ந.க.எண்.5504/2018/இ1)**

**தீர்மான எண். 276 நாள். 31.12.2018**

**அனுமதிக்கப்பட்டது**

**8)** இந்நகராட்சி வார்டு எண்–24, தினசரி மார்க்கெட் போட்டோ கடை சந்து பகுதியில் 07.12.2018 அன்று சாக்கடை அடைப்பு ஏற்பட்டதாகவும், இந்நகராட்சியில் ஏர்கம்ப்ரஸர் இல்லாததால் ஸ்ரீ தர்ஷினி செப்டிக் டேங்க் கிளினீங் தனியார் ஏர்கம்ப்ரஸர் வாகனம் மூலம் அப்புறப்படுத்தப்பட்டமைக்கான செலவுத்தொகை ரூ.4,500/–ஐ வழங்குமாறும், டெங்கு தடுப்பு பணியாளர்களுக்கு 2 குயர் நோட்டுகள் 11 எண்ணிக்கை வாங்கி வழங்கப்பட்டமைக்கான செலவுத்தொகை ரூ.770/–ஐ வழங்குமாறும் துப்புரவு ஆய்வர் கோரியுள்ளார். மேற்படி, செலவுத்தொகை ரூ.5,270/–ஐ திரு.ஆர்.அங்கமுத்து, துப்புரவு ஆய்வாளர் அவர்களுக்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. செலவுத் தொகையினை திடக்கழிவு மேலாண்மை நிதியிலிருந்து வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.6183/2018/எச்1)**

**தீர்மான எண். 277 நாள். 31.12.2018**

**அனுமதிக்கப்பட்டது**

**9)** மேட்டூர் நகராட்சி வார்டு எண்.21, நேரு நகர் பகுதியில் உள்ள சுகாதார வளாகத்திற்கு தண்ணீர் வசதி, மின்சார வசதி மற்றும் மராமத்து பணிக்கு ரூ.3.80 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 20.11.2018ம் தேதியன்று வரப்பெற்ற கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/ குறைவு |
|---|---|---|
| 1 | திரு.சி.பி.சாமி &கோ மராமத்துப்பட்டி, கோனூர்(அஞ்சல்) மேட்டூர் | 0.15% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திருவாளர்.கிருத்திகா, கன்ஸ்ரக்சன் மாடிலைன், சேலம் கேம்ப், மேட்டூர் | 3.10% சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம் |

<u>அலுவலக குறிப்பு</u>

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.15% சதவீதம் குறைவாக ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள திருவாளர் சி.பி..சாமி & கோ மராமத்துப்பட்டி, ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்றுக் கொள்ளலாம்.

**(ந.க.எண்.6005/2018/இ1)**

**தீர்மான எண். 278 நாள். 31.12.2018**

<u>அனுமதிக்கப்பட்டது</u>

**10)** மேட்டூர் நகராட்சிக்குட்பட்ட நகரின் 20 முக்கிய இடங்களில் பிளாஸ்டிக் பயன்பாட்டை தடை செய்தல் மற்றும் அதற்கு மாற்றாக துணிப்பைகள், பாத்திரங்கள் பயன்படுத்துமாறு குறித்து பொது மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த 6X6 அடி அளவில் பேனர்கள் (Flex Banners) அச்சிட்டு அமைத்து தரக்கோரி துப்புரவு ஆய்வர் கோரியுள்ளார். அதன்படி உள்ளூர் அச்சகங்களிடம் விலைப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட விபரப்படி விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| S.No | PRINTER NAME | RATE PER BANNER |
|---|---|---|
| 1 | Varma Signals, 15/23-A, Thookkanampatty, Mettur Dam -1 | Rs.1900/- |
| 2 | UP Event Organiservs 151/3A42, Valluvar Nagar, | Rs.2050/- |

| | | |
|---|---|---|
| | Mettur Dam-1 | |
| 3 | SV Signs,<br>75 A, Banapuram<br>Muthampatty, Mettur(TK) | Rs.2200/- |

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள வ.எண். 1ல் உள்ள Varma Signals, Mettur Dam அவர்களுக்கு உத்திரவு வழங்கவும் அதற்காகும் தோராய செலவினம் ரூ.38000/– ஐ மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. செலவினத்தொகையினை திடக்கழிவு மேலாண்மை நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்

**(ந.க.எண்.6202/2018/எச்1)**

**தீர்மான எண். 279 நாள். 31.12.2018**

**அனுமதிக்கப்பட்டது**

**11)** மேட்டூர் நகராட்சி பகுதியில் பாதாள சாக்கடை திட்டப் பணி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் அரசாணை எண்.25, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வடிகால் துறை நாள்.27/01/2014அரசாணையில் ரூ.73.08 கோடிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின் பேரில் பணிகள் நடைபெற்று வருகிறது இதுவரை 94 சதவீதம் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மூன்று கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களில் இரண்டு பணிகள் முடிக்கப்பட்டு உள்ளது. ஒரு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் பணிகள் நடைபெற்று வருகிறது.

மேலும் 06/12/2018 அன்று இவ்வலுவலகத்தில் நடைபெற்ற மேலாண்மை கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டதின் அடிப்படையில் சர்க்கார் தோட்டம், கோம்பூரான் காடு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் ( 5.652mld திறன் கொண்டது ) மற்றும் சேலம் கேம்ப் ( 0.924mld திறன் கொண்டது ) ஆகிய இரு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் இருந்து வெளியேறும் சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரை பாசனத்திற்கு பயன்படுத்த வேண்டி உள்ளது. மேற்படி சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரினை

அவ்விடங்களில் உள்ள நகராட்சி நிலங்களில் பாசனத்திற்கு பயன்படுத்த ஏதுவாக வெளியேறும் குழாய்களில் இருந்து தண்ணீர் சேகரிப்பு தொட்டி கட்டி (Disposal Collection Well) நிரப்பி அதில் மின்மோட்டார் பொருத்தி பயன்படுத்தலாம் என நகராட்சியால் தெரிவிக்கப்பட்டது. எனவே மேற்படி இரு இடங்களிலும் சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரை சீராக அவ்விடங்களில் உள்ள அனைத்து நிலப்பகுதிகளுக்கும் பாசனத்திற்கு பயன்படுத்தும் வகையில் சேகரிப்பு தொட்டி (Disposal Collection Well ) அமைத்து தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

மேற்படி மதிப்பீட்டில் Jet Rodding Vehicle மூன்றும் மற்றும் Manhole Cleaning Vehicle மூன்றும் வாங்க வழிவகை செய்யப்பட்டு உள்ளது. தற்போது ஒரு Jet Rodding வாகனம் மற்றும் இரண்டு Manhole Cleaning வாகனம் வாங்கப்பட்டு உள்ளது.

மேட்டூர் நகராட்சி **14.55** சதுர கி.மீ பரப்பளவில் உள்ள பகுதி என்பதாலும், மூன்று கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களில் முறையே **0.823** mld, **0.924** mld,5.652 mld கொள்ளளவு கொண்டது என்பதாலும் எதிர்காலத்தில் வாகனத்தின் பராமரிப்பு கருதியும், இந்நகராட்சியின் நிதிநிலைமை திருப்திகரமாக இல்லாததால் வாகனம் பராமரிப்புகள் செலவினம் கருதியும் ஒரு Jet Rodding Vehicle மற்றும் இரு Manhole Cleaning Vehicle போதுமானதாக இருக்கும் என கருதப்படுகிறது. இது குறித்து தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு கடிதம் அனுப்பியதில் நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், திட்ட கோட்டம், நாமக்கல், அவர்கள் **20.12.2018**ம் தேதிய கடிதத்தில் மன்ற தீர்மானம் நிறைவேற்றி தருமாறு கோரியுள்ளார்.

எனவே Jet Rodding Vehicle ஒன்றும் மற்றும் Manhole Cleaning Vehicle இரண்டும் போதுமென்பதால் அதனால் ஏற்படும் சேமிப்பு தொகையில் இருந்து மேற்படி இரு கழிவுநீர் சுத்திகரிப்பு இடங்களில் சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரினை சீராக பயன்படுத்தும் வகையில் சேகரிப்பு தொட்டிகள்மூன்று மின்மோட்டார் வசதியுடன் (Disposal Collection Well ) அமைத்து தருமாறு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினை கோரி மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.1030/ 2005 /இ1)**

**தீர்மான எண். 280 நாள். 31.12.2018**

**அனுமதிக்கப்பட்டது**

**12)** மேட்டூர் நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் வாகன எண்.TN30V8764ல் தகுதி சான்று புதுப்பிக்க வேண்டியுள்ளதாலும் மேற்கண்ட வாகனத்தில் உள்ள

பழுதுகளை சரிசெய்ய உத்தேச செலவினத்தொகை ரூ.1.10 இலட்சம் ஆகும். மேற்கண்ட செலவினத்தை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. இதற்காகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்க்கொள்ளலாம்.
3. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன்னனுமதி பெற்று மன்ற அனுமதியினை எதிர்நோக்கி ஒப்பந்தபுள்ளி கோரவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.5742/2018/இ1)**

**தீர்மான எண். 281 நாள். 31.12.2018**

அனுமதிக்கப்பட்டது

**13)** நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் whatsup அறிவுரை நாள்.14.10.2018 மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களின் கடிதம் ந.க.எண்.2560/2012/அ4 நாள்.17.10.2018ல் அறிவுறுத்தப்பட்டதற்கிணங்க, இந்நகராட்சிக்குட்பட்ட அனைத்து வீடுகளிலும் 52 Week Stickers மற்றும் Smiley strickers ஒட்டப்பட தேவையான தலா 13000 எண்ணிக்கையிலான ஸ்டிக்கர்கள் அச்சிட்டு வழங்கியமைக்கான செலவுத்தொகை GST உட்பட ரூ.1,30,390/– (ரூபாய் ஒரு லட்சத்து முப்பதாயிரத்து முந்நூற்று தொண்ணூறு மட்டும் ) ஐ தமிழ்நாடு பல்நோக்கு சேவை தொழிற் கூட்டுறவு சங்கம் லிட், திருச்சிராப்பள்ளி அவர்களுக்கு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.2326/2018/எச்1)**

**தீர்மான எண். 282 நாள். 31.12.2018**

அனுமதிக்கப்பட்டது

**14)** மேட்டூர் நகராட்சியில் அலுவலக பயன்பாட்டில் உள்ள கணினிகள் , பிரிண்டர்களுக்கு ஆண்டு பராமரிப்பு செய்தல் பணிக்கு ரூ.1.30 இலட்சம் மதிப்பீட்டில்

ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 28.12.2018 ம் தேதியன்று வரப்பெற்ற கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம் / குறைவு |
|---|---|---|
| 1 | M/s. Spyder Technology 153, PMC Plaza , Suramangalam Main Road<br>Salem | 0.86% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | DISI Print Servies, 15 Vincent. Opp Arts College.<br>Salem | 1.49% சதவிகிதம் மதிப்பீட்டை விட |

அலுவலக குறிப்பு

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.86% சதவிகிதம் குறைவாக ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள M/s. Spyder Technology , Salem ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.

**(ந.க.எண்.5541/2018/இ1)**

**தீர்மான எண். 283 நாள். 31.12.2018**

அனுமதிக்கப்பட்டது

**15)** மேட்டூர் நகராட்சி அலுவலகத்தில் உள்ள Xerox Machine அடிக்கடிபழுது ஏற்பட்டு தற்போது பயன்படுத்தப்படாத நிலையில் உள்ளதால் புதியதாக Xerox Machine moder kyocera Taskalga 2201 வாங்குவதற்கு உத்தேச செலவினத்தொகை ரூ.**90,000/– ஆகும்.** மேற்கண்ட செலவினத்தை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. இதற்காகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்க்கொள்ளலாம்.

**(ந.க.எண்.6110/2018/இ1)**

**தீர்மான எண். 284 நாள். 31.12.2018**

அனுமதிக்கப்பட்டது

**16)** மேட்டூர் நகராட்சி அலுவலகத்தில் சொத்துவரி தொழில்வரி, குடிநீர் கட்டணம் மற்றும் வரியில்லா இனங்கள் போன்றவைகள் வசூல் செய்யும் மையத்திற்கு Dot Matric Printer வாங்க உத்தேச செலவினத்தொகை ரூ.12,500/– ஆகும். மேற்கண்ட செலவினத்தை மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. இதற்காகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்க்கொள்ளலாம்.

**(ந.க.எண்.6108/2018/இ1)**

**தீர்மான எண். 285 நாள். 31.12.2018**

அனுமதிக்கப்பட்டது

**17)** மேட்டூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.18 தூக்கனாம்பட்டி நகராட்சி வாகனங்கள் நிறுத்தும் இடத்தில் செறிவூட்டப்பட்ட நுண் உரக்கூடம் அமைக்க இடையூராக உள்ள தூங்கு வகை மரக்கிளைகள் வெட்டி அப்புறப்படுத்தப்பட வேண்டியுள்ளது. மேற்கண்ட சங்கு வகை மரக்கிளைகளை பொது ஏலம் விட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன்னனுமதி பெற்று மன்ற அனுமதியினை எதிர்நோக்கி பொது ஏல நடத்தப்பட்டமைக்கும் மற்றும் பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் ஏற்கலாம்.

**(ந.க.எண்.5195/2018/இ1)**

**தீர்மான எண். 286 நாள். 31.12.2018**

அனுமதிக்கப்பட்டது

**18)** மேட்டூர் நகராட்சி பகுதிகளில் **2019–20** ஆம் ஆண்டில் பல திட்ட பணிகள் மேற்கொள்ளப்படுவதாலும், பாதாள சாக்கடை வீட்டு இணைப்புகளுக்கு டெபாசிட் தொகை வசூல் செய்யப்படுவதாலும் போதுமான கணினிகள் இந்நகராட்சியில் இல்லாததால் புதியதாக 2

கணினிகள் மற்றும் 2 HP Laser jet Printer வாங்க உத்தேச செலவின தொகை ரூ.1,25,000 ஆகும். மேற்கண்ட செலவினத்தை மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. இதற்காகும் செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்க்கொள்ளலாம்.

**(ந.க.எண்.6109/2018/இ1)**

**தீர்மான எண். 287 நாள். 31.12.2018**

அனுமதிக்கப்பட்டது

**19)** மேட்டூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் பொது மக்களுக்கு குடிநீர் அல்லாத பயன்பாட்டில் உள்ள 112 எண்ணிக்கைகளான மினிபவர் பம்புகள் மற்றும் பவர் பம்புகள் மூலம் தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் ஆழ்துளை கிணற்று மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை சரி செய்ய தேவையான ஆட்களும் மற்றும் உதிர் பொருட்கள் இவ்வலுவலகத்தில் இருப்பு இல்லாததால் பொதுமக்களுக்கு சீராக தண்ணீர் விநியோகம் செய்ய 2019-2020 ஆம் ஆண்டுகளுக்கு பராமரிப்பு பணிகள் மேற்க்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.6.00 இலட்சம் ஆகும். மேற்கண்ட செலவினத்தை மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. இதற்காகும் செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்க்கொள்ளலாம்.

**(ந.க.எண்.329/2019/இ1)**

**தீர்மான எண். 288 நாள். 31.12.2018**

அனுமதிக்கப்பட்டது

**20)** மேட்டூர் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் சுமார் 158 கி.மீ நீளம் குடிநீர் பகிர்மான குழாய்கள் பதிக்கப்பட்டு, 8500 குடிநீர் இணைப்புகள் பொது மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. குடிநீர் பகிர்மானம் மற்றும் நீர் உந்து குழாய்கள் ஏற்படும் உடைப்புகள் மற்றும் வால்வுகளில் ஏற்படும் பழுதுகளை சரிசெய்ய தேவையான தகுதி வாய்ந்த பணியாளர்கள் நகராட்சி

இல்லாததால் 2019-2020 ஆம் ஆண்டிற்கு தகுதியான பணியாளர்களை கொண்டு மேற்க்கண்ட பணிகளை மேற்க் கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.9.00 இலட்சம் ஆகும். மேற்கண்ட செலவினத்தை மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. இதற்காகும் செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்க்கொள்ளலாம்

**(ந.க.எண்.328/2019/இ1)**

**தீர்மான எண். 289 நாள். 31.12.2018**

**அனுமதிக்கப்பட்டது**

**21)** மேட்டூர் நகராட்சியில் புதிய மற்றும் பழைய தலைமை நீரேற்று சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளுக்கு 2019-20 ஆம் ஆண்டிற்கு தேவையான Alum மற்றும் Bleaching Powder வாங்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.4.00 இலட்சம் ஆகும். மேற்கண்ட செலவினத்தை மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. இதற்காகும் செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்க்கொள்ளலாம்

**(ந.க.எண்.330/2019/இ1)**

**தீர்மான எண். 290 நாள். 31.12.2018**

**அனுமதிக்கப்பட்டது**

ஆணையாளர் (ம) தனி அலுவலர்,
மேட்டூர் நகராட்சி